# எளிமையின் மேன்மை!

## *லில்லியன் ஸ்டான்லி*

எளிய உள்ளத்தைக் குறித்து இயேசு பேசியது வெறும் வாய்ச்சாலமல்ல; அவரே அப்பாதையில் வீறு நடை போட்டார். பணம், செழிப்பு, சக்தி, பெயர், புகழ் போன்ற செய்திகள் தூள்பறக்கும் காலத்தில், அதற்கு மாறாகப் பேசின இயேசுவிற்கு மக்கள் செவி அடைத்துக் கொள்கின்றனர். புதிய மொழிபெயர்ப்பு அழகாய்ச் சொல்கிறது: "ஏழையின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்; ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது" (மத் 5:3). இதே செய்தியை லூக்கா, "ஏழைகளே, நீங்கள் பேறுபெற்றோர்; ஏனெனில் இறையாட்சி உங்களுக்கு உரியதே" என்றெழுதுகிறார் (6:20). இப்போது இந்த உண்மையைப் புரிந்துகொள்வது எளிதாகிறது. இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போது: எளியவன் ஒருவனது உள்ளம் எப்படி இருக்குமோ அப்படி இருக்க நமது உள்ளத்தைப் பழக்குவித்தால் அதுவே எளிய உள்ளம் அல்லது ஆவியில் எளிமையாகும்.

நமது ஏழ்மை உள்ளம் ஆண்டவரது செல்வத்திற்கு நம்மைச் சொந்தமாக்கும். இயேசு தமது ஏழைச் சீடரைக் கவலைப்படவேண்டாம், இறைவனது சம்பத்து அவர்களுடையதாகும் என்றார். பணக்காரரைவிட ஏழைகளிடம் நற்செய்தியை சுலபமாகப் பகிரலாம் என்பது ஊரறிந்த உண்மை. அவர்கள் இறையரசிற்கு அருகிலிருப்பதற்கு இது ஒரு காரணம். அவர்கள் எதிர்ப்பு தெரிவிப்பதில்லை. எனக்கு எல்லாம் இருக்கிறது, எனக்குக் கடவுள் தேவையேயில்லை என்றெண்ணும் பணக்காரரைப் போலன்றி அவர்களுக்கு இறைவன் தேவை. எளியவன் நடந்துகொள்ளும் முறையை தியானிப்போமானால் ஆவியின் எளிமையைப் புரிந்து கொள்வது சுலபமாகும். தன்னை ஒரு பொருட் டாக எண்ணாத தாழ்மையுள்ளவனை மத்தேயு 5:3 குறிக்கிறது. வசனத்திற்கு நடுங்கி கர்த்தரையே சார்ந்திருந்து அவரைப் பிரியப்படுத்துவதில் கவனமாயிருக்கும் ஒருவனை ஏசாயா 66:2 குறிக்கிறது. போலீசை தனது வாசற்படியில் பார்த்தாலேயொழிய பணக்காரன் வேறெதற்கும் நடுங்கமாட்டானே!

நாம் பின்பற்றக்கூடிய எளியவனின் சில குணங்களைப் பார்க்கலாம் வாருங்கள்:

**1. மிஞ்சினதை மகிழ்வோடு ஏற்றுக்கொள்கிறான்.**

ஆறு வருடங்கள் நிலத்தில் பயிர் விளைவித்து எடுத்துக்கொள்ளலாம். ஏழாவது ஆண்டு நிலத்தில் பயிர் செய்யாமல் தானாக விளைவதை ஏழைகளுக்கு விட்டுவிட வேண்டும் என்பது யாத்திராகமம் 23:11இல் இறைக்கட்டளை. நாய்க்குட்டிகளுக்குப் போட்ட ரொட்டித் துண்டுகளைத் தின்ன மனதாயிருந்த கானானியப் பெண்ணை நினைக்கிறேன் (மாற் 7:28). எளிமையுள்ள ஆவிக்கு இதற்கும் மேலான ஒப்புமை உண்டோ? மிச்ச மீதியை கடைசியில் தட்டில் கொட்டினாலோ தரக்குறைவானவை கொடுக்கப் பட்டாலோ வரிசையின் கடைசிக்குத் தள்ளப் பட்டாலோ முகங்கோணுகிறோமே. ஆவியில் எளிமை வேண்டுமே என்ற ஜெபத்தோடு தாழ்மையாய் உதாசீனத்தை ஏற்றுக்கொள்வோம்.

**2. அநியாயத்தை சகிக்கிறான்.**

செல்வந்தன் ஒருவன் தனது மந்தையிலிருந்து எடுக்காமல் ஏழை ஒருவனது செல்ல ஆட்டுக் குட்டியை சமைத்து விருந்தோம்பிய, உள்ளம் உருக்கும் கதையை தாவீதரசருக்கு தீர்க்கதரிசி நாத்தான் சொன்னார். அந்த ஏழை மனிதனுக்கு இந்த அநியாயத்தைத் தட்டிக் கேட்க சத்துவம் இல்லை (2 சாமு 12:1-4). வாக்களிக்கப்பட்டப் பெண் தாவீதுக்கு மறுக்கப்பட்டாள். அரசன் சவுலினால் தொடர்ந்து விரட்டப்பட்டாலும் அஞ்சா நெஞ்சத்தோடு எல்லாவற்றையும் சகித்துக்கொண்டார்.

**3. அவன் துன்புறுத்தலை ஏற்றுக்கொள்கிறான்.**

சவுலினால் தாவீது விடாமல் துரத்தப்பட்டு உயிர் பிழைக்க ஓடினாலும், இந்தக் கசப்பான அனுபவங்களே அவரது கானங்களின் கருப்பொருள் ஆயின. அவரது வாழ்வை உறுதியாய்க் கட்டியெழுப்பியக் கற்களாகவே அவற்றைப் பாவித்தார்.

**4. அவமரியாதை, துச்சம், வெறுப்பை ஏற்றுக்கொள்கிறான்.**

துரை ஒருவர் பட்டு உடையில் தங்க மோதிரம் அணிந்து கோவிலுக்கு வருகிறார். கும்பிடு போட்டு கூட்டிப்போய் முன்னணியில் உட்கார வைக்கிறோம். குறுக்கிடும் ஏழை விசுவாசியை, "தள்ளு, ஒதுங்கிப் போ. பாயில் உட்காரு" என்கிறோம். ஒருமுறை இரயிலில் சில கிராமத்தினர் எங்களுக்கு முன் வரிசையில் உட்கார்ந்திருந்தனர். சில ஜமீந்தார்கள் நுழைந்தவுடன் அவர்கள் எழுந்து தரையில் உட்கார்ந்தனர். நான் கோபமாக, "எழுந்து உங்கள் இருக்கையில் அமருங்கள்," என்றேன். உட்கார்ந்தனர். எள்ளும் கொள்ளும் வெடித்த என் முகத்தைக் கண்ட ஜமீந்தார்கள் மெல்ல அடுத்தப் பகுதிக்கு நடந்தனர். உயர்மட்டக் குழுவினருக்கு எதிர்பேச முடியாத நாபோத்தும் மகனும் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டனர் (1 இரா 21:13). இப்படி நடத்தப்பட்டால் உங்களுக்கு நேரடி மோட்சம். ஆனால் எளியோரின் உரிமைக்காகப் போராடுங்கள்.

**5. நசுக்கப்பட்டாலும் நம்பிக்கையோடிருக்கிறான்.**

துன்மார்க்கன் எளியவனை துன்புறுத்துகிறான் (சங் 10:2; 35:10). அவர்கள் இவனைக் காட்டிலும் பலவான்களானதால் இவனால் தாக்குப்பிடிக்க முடியாது. அவனது திட்டங்கள் தூள் தூளாக்கப்படுவதால் அவனது மனக்கோட்டைகள் மண்ணாகின்றன. எளியவன் உடல்ரீதியான மற்றும் வாய்மொழி தாக்குதலுக்கு ஆளாகிறான். அவனது உள்ளம் உடைந்தாலும் எதிர்க்க முடியாத நிலையில் சகித்துக்கொள்கிறான் ( சங் 109:22) . ஆவியில் எளிமையுள்ளவர்கள் சண்டை போட முடியுமானாலும் தெய்வீக தெரிந்துகொள்ளுதலால் தம்மை அடக்கிக்கொண்டு அமைதியாயிருக்கின்றனர். உள்ளத்தில் பாயும் அம்புகள், துன்புறுத்துவோரை நோக்கிப் பற்களைக் கடிக்காமல் கடவுளை நோக்க நம்மை உந்தவேண்டும். நமக்காய் செயல்படும் ஆண்டவரே நமது அடைக்கலம் (14:6).

**6. ஒதுக்கப்படுதலைப் பொறுத்துக்கொள்கிறான்.**

"வறியவரை அவனுடைய உடன்பிறந்தாரே வெறுப்பர்; அவருடைய நண்பர் அவரைவிட்டு அகலாதிருப்பரோ? அவர் கெஞ்சி வேண்டினாலும் அவர்கள் ஓடிவிடுவார்கள்" (நீதி 19:7). நீங்கள் தள்ளி விடப்படும்போது, துச்சமாய் எண்ணப்படும்போது, உங்கள் ஞானமான ஆலோசனை குப்பைத்தொட்டியில் வீசப்படும்போதுதான் ஆவியில் எளிமையை வெளிப்படுத்த சிறந்த தருணம். ஓரங் கட்டப்படுதலை விவாதிக்காமல் ஏற்றுக்கொள்ளுங்கள். தன் புத்தியால் நகரத்தைக் காப்பாற்றின ஏழையைக் குறித்து பிரசங்கி 9:15,16இல் வாசிக்கிறோம். ஆனாலும் யாரும் அவனை நினைவுகூர்ந்து பாராட்டவில்லை. அவன் முற்றிலும் மறக்கப்பட்டுப் போனான். அந்தரங்கத்தில் பார்த்த கர்த்தர் அவனுக்கு வெளியரங்கமாய் பதிலளிப்பார். அவனது உலக ஏழ்மை அவனை ஆன்மீகப் பணக்காரனாக்கும்.

ஆன்மீக ஏழ்மையில் வளர திருமறை பல ஆலோசனைகளைக் கூறுகிறது. நான் ஒரு புழு என்று சொன்ன தாவீதைப் போல நாம் இருக்க வேண்டுமென்று நாம் உளமார அறிந்திருந்தாலும் நடைமுறையில் எப்படி நடந்துகொள்கிறோம்? சொல்வதைத்தான் செய்கிறோமா? இந்த தெய்வீக குணத்தை வளர்க்க என்ன செய்யலாம்? பார்க்கலாம் வாருங்கள்.

**அ) உங்கள் நிலை குறித்து நாணாதீர்கள்.**

ஒரே கல்லினால் கோலியாத்தை வீழ்த்தின பின்பு தாவீது, பெருமை பாராட்டாமல், "அரசருக்கு மருமகன் ஆவது உங்களுக்கு அவ்வளவு எளிதாய்த் தோன்றுகிறதா? நான் எளியவனும் தாழ்ந்தவனுமாய் உள்ளேன் அன்றோ" என்றான் (1 சாமு 18:23). நாமாயிருந்தால், 'இத்தனை பெரிய வெற்றியைச் சம்பாதித்த நானே இதற்குத் தகுதியுள்ளவன்' என்று மார்தட்டுவோம்.

**ஆ) பண்பாய்ப் பேசுங்கள்.**

கடுமையான வார்த்தைகளும் முரட்டு நடத்தையும் எளிமையான ஆவிக்கு முரண்பாடானவை. "ஏழை கெஞ்சிக் கேட்பார்; செல்வரோ கடுகடுப்புடன் மறுமொழி கொடுப்பார்" (நீதி 18:23). ஆவியில் எளிமையானவர் எந்தச் சிக்கலையும் சாந்தமாய்ப் பேசி மென்மையாய் சரிசெய்யப் பார்ப்பார். முரடரோ புல்டோசர் போல அடித்து நொறுக்கிச் செல்வர். நாவைக் கட்டுப்படுத்தி அடக்கி

ஆளுவது, தீர்மானம் செய்து ஒரே நாளில் பயிலும் கட்டுப்பாடல்ல. பல்லாண்டு கட்டுப்பாடும் முயற்சியும் தேவைப் படலாம்.

**இ) நேர்மையாய் நடந்து கொள்ளுங்கள்.**

"முறைகேடாய் நடக்கும் செல்வரைவிட, மாசற்றவராய் இருக்கும் ஏழையே மேல்" (நீதி 28:6). நாம் உதாசீனப்படுத்தப்படும்போது, குறுக்கு வழியில் பெயர் வாங்க சோதிக்கப்படலாம் - தனக்கு இல்லாததைப் பெறும்படியாக ஏழை திருடுவதைப் போல. தற்காலிக திருப்தி அவமானத்தையும் துக்கத்தையும் கொண்டுவரும். எனவே உறுதியாய், என்ன வந்தாலும், தடுமாறாமல் நேர்மையைக் காத்துக் கொள்ளுங்கள். "சான்றோர் உயர்வானவற்றைச் சிந்திக்கின்றனர்; அவர்கள் சான்றாண்மையில் நிலைத்து நிற்பர்" (ஏசா 32:8).

**ஈ) உங்களுக்கு விரோதமாகப் பொய் சொல்லப் பட்டால் மகிழ்கொண்டாடுங்கள்.**

மத்தேயு 5:11,12 அப்பியாசிக்கக் கடினமானாலும், அது இயேசுவின் வாய்மொழியானதால் கீழ்ப்படிய முயற்சிப்போம். ஏழ்மையான உள்ளத்தைக் குறித்துப் போதித்துவிட்டு இயேசு, அதை நடைமுறைப்படுத்தவும் கற்பிக்கிறார். உங்களைக் கால்வார பொல்லாதோர் உங்களுக்கு விரோதமாய் சூழ்ச்சிகள் செய்யலாம் (ஏசா 32:7). உங்களுக்கு எளிமையான ஆவியுண்டோ என்று பரிசீலிக்க இவை ஆன்மீகப் பரீட்சையே.

**உ) கர்த்தருக்கு உங்களை அர்ப்பணித்திடுங்கள்.**

உங்களுக்கு வரும் தொல்லைகள் துயரங்களை ஆண்டவர் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார். எனவே சுயபுத்தியில் சாராமல் கர்த்தர் செயல்படக் காத்திருங்கள். அதே சமயம் பிறர் உதவியை ஏற்றுக்கொள்வதும் குற்றமல்ல. மற்றவர்கள் உதவி செய்வார்கள் என்று வாளா விருப்பதும் சரியல்லவே. உதவியை ஏற்றுக் கொள்வதோ நிராகரிப்பதோ ஞானமாய் தீர்மானிக்க வேண்டும். தன்னிறைவு நம்மைத் தனிமைப் படுத்திவிடும். கிடைக்கும் உதவியை ஏற்றுக் கொண்டு விடுதலைக்கு கர்த்தரையே நோக்கியிருங்கள்.

**ஊ) பணிவுடனிருங்கள்.**

மனைவியர் தம் வாழ்க்கை எல்லாம் அடிபணியக் கற்கின்றனர். மனைவியரின் ஆலோசனையை ஏற்பது கணவன்மாருக்கு என்றுமே சவால்தான். தங்கள் தலைவரின் அதிகாரம் ஊழியருக்குத் தலைவலிதான். பெற்றோரின் கண்டிப்பு பிள்ளைகளுக்குக் கடுப்புதான். இருப்பினும் ஏழையின் உள்ளமுள்ளவனது முத்திரையே பணிவு தான். வம்ச வரிசையில் இடம் பெற்றுள்ள இயேசுவின் உலகத் தந்தை யோசேப்பு, தாவீதின் சிங்காசனத்தில் வீற்றிருக்கத் தகுதி பெற்றிருந்தும் தாழ்மையான தச்சனாயிருந்தார். மரியாளும் நான் அரசியாயிருக்கத் தகுதி பெற்றவள் என்று தலைநிமிர்ந்து நடக்கவில்லை. தனக்குக் கீழ் இருந்தோரின் ஆலோசனையை தாவீது பலமுறை கேட்டு நடந்தார் (1 சாமு 25:35). ஆலோசனை தெய்வீகமானதா இல்லையா என்று பகுத்தறிவதும் செம்மையானதானால் அதை ஏற்றுக்கொள்வதும் ஒருவரது ஆன்மீகத்திறனைக் காட்டுகிறது.

**எ) ஞானமாய் நடந்துகொள்ளுங்கள்.**

"செல்வர் தம்மை ஞானமுள்ளவரென்று எண்ணிக்கொள்வர்; உணர்வுள்ள ஏழையோ அவரது உண்மையான தன்மையை நன்கறிவார்" (நீதி 28:11). பணக்காரரின் போலித் தனத்தை எளியவன் சுலபமாய்க் கண்டறிவான். ஞானமும் வீரியமும் நிறைந்த சாதா மனிதன் மொர்தெகாய். அரண்மனை வாசலில் முக்கிய இடம் வகித்தவர். ஆனால் அதிகாரி ஆமானுடன் ஒப்பிட்டால் அவர் ஒன்றுமில்லைதான். இருப்பினும் அந்தப் பெருமை பிடித்த துன்மார்க்கனுக்குத் தலைவணங்க அவர் மனம் மறுத்துவிட்டது. அதனால் அவருக்குத் துன்பம் வந்தாலும் பரமன் அவரை உயர்த்தினார். எளிமை உள்ளம் கொண்டவர் எல்லாவற்றையும் கேள்வி கேட்காமல் ஏற்றுக்கொண்டு குழலூதுவோருக்கெல்லாம் கூத்தாடவேண்டுமென்பதல்ல. கடவுள் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும் அன்பும் தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறார் (2 தீமோ 1:7). ஆக எளிய ஆவியுள்ளோர் சூழ்நிலையைப் புரிந்துகொண்டு ஞானமாய் நடந்துகொள்ள வேண்டும்.

**ஏ) வசனத்திற்கு நடுங்குங்கள்.**

நாம் திருமறையை வாசித்தாலும் அதில் அக்கறை காட்டுவதில்லை. தேவனுடைய பெட்டிக்காக ஏலியின் இருதயம் தத்தளித்துக் கொண்டிருந்தது (1 சாமு 4:13). பத்துக் கட்டளைகளைக் குறித்து எத்தனை பயபக்தியோடிருந்தார் என்று அது காட்டுகிறது. "சவுல் பெலிஸ்தரின் பாளயத்தைக் கண்டபோது பயந்தான், அவன் இருதயம் மிகவும் தத்தளித்துக் கொண்டிருந்தது" (28:5). ஒருவர் கர்த்தருக்கு முன்பாக நடுங்கினார், மற்றவர் மனிதனுக்கு முன்பாக நடுங்கினார்! கர்த்தருடைய வார்த்தைக்கு நடுங்கிக் கீழ்ப்படிந்திருந்தால், எதிரிகளுக்கு முன்பாக சவுல் நடுங்காமல் சிங்கம் போல வீரியமாய் இருந்திருப்பாரே. நாமும் சவுலின் படகில்தான் இருக்கிறோமா? "தேவனின் வார்த்தைகளுக்கு நடுங்குகிற யாவரும்" எஸ்றாவிடம் வந்தனர் (எஸ்றா 9:4). ஏன்? இறைவனோடு ஒப்புரவாகத்தான். தனது வார்த்தையை நடுக்கத்தோடு ஏற்றுக்கொண்டு கீழ்ப்படிகிறவர்களோடுதான் கர்த்தர் பேசுகிறார் (ஏசா 66:5). நூற்றுக்கு நூறு கீழ்ப்படியும் அர்ப்பணிப்போடு உடைந்த உள்ளத்தோடு திருமறையைத் திறந்தாலன்றி கர்த்தரின் சத்தத்தைக் கேட்க எதிர்பாராதீர்கள். தானியேல் நடுக்கத்தோடே இறை வார்த்தையைக் கேட்டார் (தானி 10:11). கர்த்தர் பேசினபோது மோசேயும் பவுலும் நடுக்கத்தோடே கீழ்ப்படிந்தனர் (அப் 7:32; 9:6). பேலிக்ஸ் என்ற தேசாதிபதி ஆன்மீகக் காரியங்களில் இருமனமுள்ளவர். நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்து பவுல் பேசுகையில், பேலிக்ஸ் பயந்து: "இப்பொழுது நீ போகலாம், எனக்குச் சமயம் வாய்க்கும்போது உம்மை அழைப்பிப்பேன்" என்றார் (24:25). துக்ககரமாக சமயம் வாய்க்கவேயில்லை. கீழ்ப்படிதலை வசதியான நேரத்திற்கு ஒத்திப்போட்டு கீழ்ப்படியாமலே போகிறோமோ? விசுவாசித்து நடுங்குகிற பிசாசுகளா நாம்? (யாக் 2:19).

**ஐ) விசுவாசத்தில் செல்வர்களாயிருங்கள்.**

உலகின் பார்வையில் ஏழைகளாய் இருப்பவர் களை நம்பிக்கையில் செல்வர்களாக கடவுள் தேர்ந்து கொண்டார் (யாக் 2:5). உலக ஆசீர் குறைவுபட்டா லும் ஆன்மீக ஆசிகளை ஆண்டவர் அள்ளிக் கொடுக்கிறார். இறையரசை சுதந்தரிக்க விசுவாசத்தில் வளர்ந்து, ஏக்கமோ ஏழ்மையோ பாடுகளோ, எதுவானாலும் கைகோர்த்துச் செல்ல வேண்டும்.

ஆவியில் எளிமையை கற்க இயேசுவே நம் முன்மாதிரி. கிணற்றருகே உணவுக்காகக் காத்திருந்தார். பசியைப் போக்க அத்தி மரத்தை நோக்கினார். அவருக்கு நீதி மறுக்கப்பட்டது. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஆட்டுக்குட்டியைப் போலிருந்தார் (ஏசா 53). துன்புறுத்தப்பட்டார், அவமதிக்கப்பட்டார். அவருக்கா உதவியில்லை? தகப்பனைக் கேட்டால் உடனடியாக தூதர்குழு வந்திருப்பரே. ஆனாலும் அவர் அப்படிச் செய்யவில்லை. "அவர் வையப்படும்போது பதில் வையாமலும், பாடுபடும்போது பயமுறுத்தாமலும், நியாயமாய்த் தீர்ப்புச் செய்கிறவருக்குத் தம்மை ஒப்புவித்தார்" (1 பேது 2:23). யாருக்காக வந்தாரோ அவர்களாலேயே நிராகரிக்கப்பட்டார். கிருபையோடு பேசினார். அவரைப்போல யாருமே பேசினதில்லை. பாவமற்றவராயிருந்தார். தன்னைக் குறித்துப் பேசப்பட்டப் பொய்களைக் கண்டுகொள்ளவில்லை. பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து ஞானமாய் நடந்தார். இறைவார்த்தையை கனப்படுத்தி, தேவனுடைய வாயிலிருந்து வரும் வார்த்தையினால் பிழைப்பேன் என்று பிசாசுக்கு சவால்விட்டார். மெய்யாகவே அவர் விசுவாசத்தில் செல்வந்தர்!

வாருங்கள், இயேசுவிடம் சென்று அவரது நுகத்தை ஏற்றுக்கொண்டு ஆவியின் எளிமையைக் கற்றுக்கொள்வோம். அவர் சாந்தமும் மனத்தாழ்மையுமானவர் (மத் 11:29). இதய எளிமையில் கைத்தேறிவிட்டோமானால் ஆசீர்வாதங்களிலெல்லாம் உன்னத ஆசீர்வாதமாகிய இறையரசை சுதந்தரித்துக் கொள்வோம்! □